# கமலவல்லியின் தரிசனம்.

சமீபத்தில் நான் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் நீராட்ட சேவையினை தரிசிக்கச் சென்றிருந்தேன். ஆண்டாள் பிரத்யக்ஷமாக வந்தமர்ந்தது போன்ற ஒரு நிலை. அவளது அருட்செறிவினை பரிபூரணமாக உணர முடிந்தது. அங்கு அவள்தான் அரசாட்சி. திரு. ரெங்கமன்னார் அவளது அன்புக்கு கட்டுப்பட்ட ஒரு கணவர். ஆண்டாளின் முகத்தில், ஒரு கம்பீரம் - அவள் நினைத்தக் காரியத்தை சாதித்து முடித்த சாதுர்யம, சற்றே சிறிது கர்வம் கலந்த ஒரு தெய்வீகம் அனைத்தையும் தரிசித்தேன். அங்குள்ள அந்த ஊர் பெண்மணிகளிடம் கூட அந்த ஒரு தைரியமான, சற்றே கர்வம் கலந்த சாதுர்ய கம்பீரச்சாயலை உணர முடிந்தது. அரசி எவ்வழீயோ அவ்வழிதானே அவளைச் சார்ந்தவர்களும்!




இந்த ஆண்டாளைப் போன்றே ஒரு அனுபவம் நமது அரங்கநாதர் திருக்கோவிலைச் சார்ந்த உறையூர் திரு கமலவல்லித் தாயாரிடமும் அடிக்கடி உணர்வேன். பெரும்பாலும் தம்பதி சமேதரராகக் காட்சி தரும் அனைத்துக் கோயில் தாயார்களுமே இது மாதிரிதானோ? அல்லது இது மாதிரியான உணர்வு எனக்கு மட்டுமா? தாங்கள்தான் முடிவு சொல்ல வேண்டும்!

இந்த கமலவல்லித் தாயார் ஒரு கற்பகவிருட்சம். கற்பகவிருட்சம் கூட நாம் எதை வேண்டினோமோ அதைத்தான் தரும். ஆனால் தாயார் நாம் எதையும் வேண்டாவிடினும் நமக்கு எது தேவையோ அதனை பூர்த்தி செய்வாள். இது சத்தியம். நான் என் வாழ்வில் பரிபூரணமாக உணர்ந்ததை சொல்கின்றேன். இந்த தாயார் வீரஆசனம் போட்டு கம்பீரமாக அமர்ந்திருப்பவள். உறையூரை ஆண்ட சோழராஜாவின் குமாரத்தி. இன்றும் கூட அவள் ராஜகுமாரத்திதான்! அலங்காரம் செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் எப்போதும் கம்பீரமான சேவைதான். தன்னை அண்டியவர்களிடம் சௌலப்யம்தான்.

தர்மவர்மர் என்ற சோழ பேரரசரின் கடுந்தவத்தின் பயனாகவே, நாம் இன்று வரை உயர்வற உயர்நலமுடைய உத்தமனை, நம் அரங்கனை தரிசித்துக் கொண்டிருக்கின்றோம். அவரது தவம் ஒரு சில வருடங்களல்ல. பல்லாயிரக்கணக்கான வருடங்கள் (சுமார் 12000 வருடங்கள் என்று சொல்வர்). அவரது அருந்தவத்தின் பயன் அரங்கன் அவரருகே வந்தமர்ந்தான். அப்போது அரங்கனிடம் கேட்டராம், "ஸ்வாமீ! அப்படி நான் என்ன பெரிதாக செய்து விட்டேன்! தாங்களைத் தரிசிக்கும் பேறு கிடைக்குமளவிற்கு" என்று. என்ன ஒரு மனப்பாங்கு!.

இவரன்றோ உண்மையான வைணவர். வைணவம் என்றால் 'வை - ஆணவம்' என்றும் கூட பொருள் கொள்ளலாமோ! ஆணவத்தினை எவனொருவன் விட்டொழிக்கின்றானோ அவனே உண்மையான வைணவன். ரங்கவிமானத்தை சுமந்து வந்த வீபிடணன் கூட எவ்விடத்தும் பூஜை செய்ததாக வரலாறு இல்லை. ஆனால் தர்மவர்மர் பூஜித்திருக்கிறார். "தர்மவர்ம சோழேந்திர பூஜிதாய நம:" என்று கூட ஒரு நாமாவளி உண்டு. இத்தகைய பெருந்தகையின் புதல்விதான் திரு. கமலவல்லித் தாயார். பெருமாளிடம் ஆழங்கால் பட்டு அதிகம் அனுபவித்த பெரியாழ்வாரின் வாரிசு, திரு ஆண்டாள், ஆக இருவருமே 'கருவிலேயே திருவுடையவர்கள்' அரங்கனை எப்படியும் அடைய வேண்டும் என்ற வைராக்கியத்தோடு நினைத்ததை சாதித்தவர்கள். இதில் ஆண்டாளின் ஸந்நிதியில் ரெங்கமன்னார், ஆண்டாள் அருகிலேயே நின்ற கோலம். ஆனால் உறையூரில் தாயார் அருகில் அமர்ந்த கோலம். உற்சவர் கமலவல்லியோ பெருமாளின் திருவடி கீழ் அவரின் இரண்டு திருவடிகளுக்கும் இடையே அமர்ந்த கோலம்!. இவள்தான் பாதுகாதேவி! தேசிகர் அனுபவித்த பாதுகாதேவியின் மற்றொரு கோலம்!.




தேசிகர் பாதுகா ஸஹஸ்ரத்தில் ஒரு இடத்தில் சொல்லுவார். "ஹே! பாதுகையே! உனது கீழ்பாகம் பக்தர்களின் தலை மேல் உள்ளது. மேற்பாகமோ பெருமாளின் திருவடியினை சுமந்து கொண்டுள்ளது. இவ்விதம் நீ ஜீவாத்மாக்கும் பரமாத்மாக்கும் சம்மந்தம் ஏற்படும் ஒரு பாலமாக உள்ளாய்!" என்று. உறையூரில் எழுந்தருளியிருக்கும் பாதுகாதேவியான திரு கமலவல்லியை தரிசிப்பவர்களையும், அவளைத் தியானிப்பவர்களையும், அவள், நாம் செய்த பாபங்களைப் போக்கி, நம்பெருமாள் திருவடியிடத்து சம்பந்தம் ஏற்படச் செய்கிறாள்!

திரு இராமரின் திருப்பாதுகைகள் அயோத்தியை அரசாண்ட போது எங்குமே அழுகுரல் இல்லையாம்!. அசம்பாவிதங்கள் ஏதும் கிடையாதாம்!. மரணம் என்பதே கிடையாதாம்! பாதுகையே இவ்விதம் அரசாண்டபோது நம் பாதுகாதேவியான திரு. கமலவல்லியின் அரசாட்சிப் பற்றி கூறவும் வேண்டுமோ? இவளிடத்து சரணடைந்தவர்களுக்கு மரணபயம் என்றும் இல்லை. இதனை நாம் நிரூபிக்க இன்னொரு வலுவான ஆதாரத்தினையும் கூறுவோம்!

திரு வில்லிபுத்தூரிலும் இங்கும் பெருமாள் 'வடபத்ர சாயி 'தான். நம் சோழமண்டலத்தின் வடபத்ரசாயி உறையூரில் எழுந்தருளியுள்ள அழகிய மணவாளன்தான். வில்லிபுத்தூரிலாவது அவர் சயனித்துக்கொண்டுள்ளார். இங்கு அழைத்த குரலுக்கு ஒடி வந்து காப்பாற்றுவதற்குத் தயாராக சங்கு, சக்ர. கதாதரராய் நின்ற கோலத்தில் உள்ளார். நம்பெருமாள் வடக்கு நோக்கி சேவை சாதித்து அருளுகின்றார்.

இவ்விதம் அவர் ஸேவை சாதிப்பதென்றால் தென்திசையில் நின்றால்தானே வடக்கு நோக்கி ஸேவை சாத்தியம்! தென்திசையின் திக்பாலகர் யார் ? எமராஜன்! நம்பெருமாள் அத்திசையில் நின்றால் இவன் எங்கு அங்குயிருப்பான்? அவனுக்கு அங்கு என்ன வேலை ? நம்பெருமாளும், கருணைக்கடலான கமலவல்லியும் அங்கு நிற்கும் போது , அவனை அண்டிய நமக்கு ஏது எமவாதனை ? நம் வைணவர் அனைவருக்கும் 'எமவேதனைத் தீர்க்கும் தலம்' இந்த மகத்தான திவ்யதேசம்தான்!

நம்பெருமாளின் மீது பக்தி கொண்டு திருவரங்கத்தின் கருமணியாம் பெரியபெருமாளின் பாதாரவிந்தத்தில சரணடைந்தவள் நம் கோதை நம்பெருமாள் அரங்கத்தினின்று கிளம்பி தர்மவர்மாவின் அரண்மனை அடைந்து அன்புடன் ஆட்கொண்டது கமலவல்லியைநாம் எல்லோரும் அரங்கனுக்கு அடிமையென்றால் அரங்கனோ அன்புக்கு அடிமை!

தர்மவர்மா செய்த அருந்தவத்தின் பயனாக அவனது அன்பிற்கு பிரதிகூலமாக, அழகிய மணவாளன் கமலவல்லியை ஆட்கொண்டார். நம் சந்ததியினரின் எதிர்காலம் நாம் இப்பொழுது செய்கின்ற வினையினால்தான் தீர்மானிக்கப்படுகின்றது. நன்மை பல செய்வோமாயின் அது வருங்கால சந்ததியினரின் வைப்புநிதி. 'மாதா பிதா புண்ணியம் மக்களுக்கு!'. தர்மவர்மா அன்று வைத்த வைப்புநிதியை இன்றளவும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். நம்பெருமாளும் தாயாரும் சேர்ந்து இணைந்திருக்கும்

பங்குனி உத்திரம் நம் வைணவர் அனைவருக்கும் ஒரு இனிய திருநாள். ஆனால் என்றுமே கமலவல்லியுடன் சேர்ந்து இணைந்து ஸேவை சாதித்தருளும் அழகிய மணவாளனை நாம் தரிசிக்கும் அனைத்து நாளுமே நமக்கு மிக இனிய நாள்!. இங்கு நித்யபடியே பங்குனி உத்திரம்தான்! தினப்படி கொண்டாட்டம்தான்! தரிசிப்பவர்களின் வாழ்வுதனில் வசந்தம்தான் என்றும் !

நம்பெருமாள்தான் முதலில் தோன்றிய அர்ச்சை ( விக்ரஹம்) வடிவம். அர்ச்சையின் முதல்வன் அரங்கன்தான். பிரம்மாவின் ஆராதனைக்காக மஹாவிஷ்ணுவானவர் தன்னுடைய வடிவத்தினைக் குறுக்கிக் கொண்டு அரங்கனாக அர்ச்சாரூபத்தில் ஆவிர்பவிக்கிறார். ஆக அரங்கன்தான் அர்ச்சைக்கு இலக்கணம். பிரும்மாதான் விக்ரஹ வழிப்பாட்டினை முதன்முதலில் தோற்றுவித்தவர். பெருமாள் தன்னைத் தானே உருவாக்கிக் கொடுத்துள்ளார். இதற்கு 'ஜீவித பிரதிஷ்டை' என்று கூறுவர். இதனை உணர்ந்துதான் ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள் மற்றும் மஹனீயர்கள் எங்கு பிறந்திருந்தாலும் இவ்விடத்து ஒரு தனி நாட்டத்துடன் அளவிலா ஆர்வம் கொண்டு நாடினர். இதனால்தான் திருவரங்கம் 108 வைணவத்தலத்துள் முதல் தலமாக விளங்குகின்றது. பல யுகங்கள், பல்லாயிரக்கணக்கான வருடங்கள் ஆகியும் இன்னமும் நம்பெருமாள் ஸேவை சாதித்துக்கொண்டிருக்கின்றார் என்றால் அவரின் இந்த ஜீவிதம்தான் காரணம். இவர் பேசும் பெருமாள்! பலரிடம் இன்னமும் பேசிக் கொணடிருக்கின்றார்!. இவர் சிலையல்ல! உண்மை! அடியார்களை ஆட்கொண்டு கரையேற்றி விட காத்திருக்கும் விமலன்! இம்முதல்வன் வலுவில் சென்று ஆஸ்ரயித்து குடி கொண்ட இடம் நம் கமலவல்லியின் அரண்மனையாம் உறையூராகும். ஒருவர் ஒரு இடத்திற்கு விரும்பிச் சென்றால் கண்டிப்பாக அந்த இடத்தில் அவர் மகிழ்ச்சியுடன் இருக்க முடிந்தால்தானே செல்வர்! இப்போது சொல்லுங்கள்! மகிழ்ச்சியுடன் எப்போதும் கமலவல்லியுடன் இருக்கும் இத்தலத்தில் நாம் மனப்பூர்வமாக வேண்டின் நிறைவேறுமா? நிறைவேறாதா? இனி நீங்கள் அனைவரும் கவலையை விடுங்கள்! கமலவல்லியினை ஆஸ்ரயிங்கள்! "கமலவல்லியின் தரிசனமே, கவலையின் நிரசனமே

நம்பெருமாள் அவரிடத்து அடிபணிந்தாரிடத்துக் கொள்ளும் வாஞ்சையே அலாதியானது. அது எளிதில் எழுத்தினால் விவரிக்க இயலாதது. மெய்யடியார்க்கு ஏதும் நேர்ந்தால் அக்குற்றம் பொறுக்காதவர்பெருமாள் பெரியவர். அவரைக் காட்டிலும் அவர்தம் 'ரங்கா' எனும் நாமம் பன்மடங்கு சிறப்பு வாய்ந்தது. இதனைக் காட்டிலும் இவர்தம் நாமாவினை ஓயாமல் ஓதிக் கொண்டிருக்கும் பரம பாகவததோத்தமரின் கீர்த்தி பெரியது. இவ்விதம் 'சதா த்யான' பரராயிருந்தவர் திருப்பாணாழ்வார். இவர் அயோனிஜர். பெருமாளின் ''திரு வத்ஸ'த்தின் அம்சம். கமலவல்லி உறையும் உறையூரில் அவதரித்தவர். கமலவல்லிக்கும் 'வாஸ லக்ஷ்மீ!' என்றொரு பெயர் உண்டு. நம்பெருமாளின் ஹ்ருதயத்தில் சதா வாஸம் செய்து கொண்டிருப்பவளாம்!.

திருப்பாணாழ்வாரும் நம்பெருமாள் திருவத்ஸத்தின் அம்சம். அதனால்தான் உறையூரில் தோன்றினாரோ? அதனால்தான் ரெங்கநாதருடன் பத்தே பத்து பாட்டிலேயே பரவசமாய் பரவி ஐக்கியமாகி விட்டாரோ? இந்த முனிவாஹனர் கமலவல்லியின் அம்சமாக கூட இருக்கலாமோ? இவ்வளவு மஹனீயர்கள் தோன்றிய உறையூரில் நம்பெருமாள் பரம சந்தோஷத்துடனிருப்பதில் வியப்பேதுமில்லை! நாளை மறுநாள் பங்குனி ஆயில்யம்! ( ஸர்வஜித் பங்குனி 5ம் தேதி ( 18.4.2008)) நம்பெருமாளுடன் கமலவல்லி சேர்த்தி சேவை! நேரில் வந்து ஸேவியுங்கள்அவரது பரவசம் உங்களுக்குக் கண்கூடாகத் தெரியும்!. இவ்விருவரின் கடாக்ஷமும் ஆழ்வாரின் ஆசியும் உங்களை மேன்மையுறச் செய்யும்.எங்கள் அர்ச்சகர்கள், கைங்கர்யங்கள் ஆகட்டும், உற்சவங்களுக்குக் காப்புக் கட்டுதல் ஆகட்டும், எதுவாயினும் இங்குதான் தொடங்குவர். இவ்விதம் தொடங்கியவர்களுக்கு என்றென்றும் மேன்மைதான்! என் தந்தையை எதற்கும் லாயக்கில்லை என்று அவர் காலத்தில் வாழ்ந்த பெரியவர்கள் ஒரு காலத்தில் ஒதுக்கியிருக்கின்றார்கள்.

அவர் மனம் வெதும்பி ஒரு நாள் கமலவல்லியிடத்தில் கைங்கர்யம் செய்த போது அழுதுருகின்றார். இந்த அம்மாவின் அரவணைப்பு பிற்காலத்தில் அவரை ஆகமத்தில் ஒரு பெரிய வித்வானர்க்கியிருக்கின்றது. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டு பல கௌரவங்களை அடைந்தார். இந்து சமயம் மட்டுமின்றி

பைபிள், குரான் ஆகியவற்றிலும் அவர் சிறந்த ஞானம் உடையவராயிருந்தார். ஒரு சமயம் போப் அவர்கள் சென்னை வந்த போது. எல;;லா சமயங்களிலிருந்தும் வல்லுனர்களை அழைத்து ஒரு கலந்துரையாடல் செய்தார். அவ்வமயம் இவரின் ஞானத்தினைக் கண்டு வியந்துள்ளார். என் தந்தை அடிக்கடிச் சொல்லுவார் எல்லாம் அந்த கமலவல்லியின் கருணை! என்று!. இவள் கருணை மழை! கமலவல்லீ! என்றழைத்துக் காரியத்தினைத் தொடங்குகள்! வெற்றிதான் என்றும் உங்களுக்கு!. கமலவல்லி ' வாஸலக்ஷ்மீயாக நம்பெருமாளின் ஹ்ருதயத்தில் மட்டுமல்ல - அவளிடத்து அடிபணிந்த நம் ஒவ்வொருவரின் மனதிலும் வாஸம் செய்கிறாள். அவளது கமலப்பாதங்களை பணிவோம்! கவலை யாவையும் மறப்போம் "கமலையின் தரிசனமே கவலையின் நிரசனமாம்!”

// முற்றும் //